**<u>சுருக்கம்</u>**

நெடுஞ்சாலைகள்–இரயில்வே திட்டப் பணிகள் தமிழ்நாட்டின் பல்வேறு சாலைப் பகுதிகளிலுள்ள 39 இரயில்வே கடவுகளுக்குப் பதிலாக சாலை மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்கள் அமைத்தல்–இரயில்வே துறையால் ஏற்பளிக்கப்பட்ட பாலங்களுக்கு நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒப்பளிப்பு அளித்தல்– ஆணை வெளியிடப்படுகிறது

---

நெடுஞ்சாலைத் (எச்.க்யூ.2) துறை

அ.ஆ. (நிலை) எண் 272 நாள் 13.11.2007

படிக்கவும்.–

1. பொது மேலாளர், தென்னக ரயில்வே கடித எண் W. 563/ஐ/2007–08/ROB/RUB. நாள் 13.03.2007
2. தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்), நெடுஞ்சாலைத் துறை கடித எண் 1386/பி2/2002, நாள் 14.05.2007, 10.07.2007 மற்றும் 23.08.2007

––––

ஆணை.

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாட்டில் பல்வேறு சாலைப் பகுதிகளிலுள்ள 39 இரயில்வே கடவுகளுக்குப் பதிலாக சாலை மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்கள் கட்டும் பணிகளை 2007–2008 ஆம் ஆண்டில் இரயில்வே திட்டப் பணிகளின் கீழ் பணப் பகிர்வு அடிப்படையில் எடுத்துக் கொள்ள ரயில்வே வாரியத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக தென்னக ரயில்வே தெரிவித்துள்ளது. இரயில்வே துறையால் தெரிவு செய்யப்பட்ட 39 பணிகளுக்கு ரூ. 774.80 கோடி மதிப்பில் நிர்வாக ஒப்புதல் அளிக்கக் கோரி தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்) அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார். இப்பணிகளை விரைவாக செயல்படுத்திடும் பொருட்டு விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் வடிவமைப்பு சரிபார்த்தல் பணிகளுக்கு கலந்தாய்வாளர்களை அமர்த்துதல் போன்ற பணிகளுக்கு அனுமதி வழங்குமாறும் தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்), நெடுஞ்சாலைத் துறை அரசைக் கோரியுள்ளார். மேலும், இப்பாலப் பணிக்கான திட்ட செலவினத்தை கீழ்க்கண்ட வகையில் செலவிட தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்), நெடுஞ்சாலைத் துறை அவர்கள் தெரிவித்துள்ளார்.

| <u>நிதியாண்டு</u> | <u>செலவிடப்படும் தொகை</u><br>ரூபாய் |
|---|---|
| 2007–08 | ரூ. 24.80 கோடி |
| 2008–09 | ரூ.100.00 கோடி |
| 2009–10 | ரூ.300.00 கோடி |
| 2010–11 | ரூ.350.00 கோடி |
| மொத்தம் | ரூ.774.80 கோடி |

2. தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்) நெடுஞ்சாலைத் துறை, சென்னை.15 அவர்களது செயற்குறிப்பானது அரசால் நன்கு பரிசீலிக்கப்பட்டது. அவரது பரிந்துரையினை ஏற்று, தமிழ்நாட்டில் பல்வேறு சாலைப் பகுதிகளில் உள்ள, பிற்சேர்க்கையில் குறிப்பிட்டுள்ள 39 இரயில்வே கடவு.களுக்கு பதிலாக சாலை மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்கள் அமைக்கும் பணிக்கு ரூ. 774.80 கோடிக்கு (ரூபாய் எழுநூற்றி எழுபத்தி நான்கு கோடி மற்றும் என்பது இலட்சங்கள் மட்டும்) நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒப்பளிப்பு அளித்து அரசு ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி 2ல் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள 39 இரயில்வே மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்கள் பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிப்பதற்கும் மற்றும் வடிவமைப்பை சரிபார்ப்பதற்கும், ஆலோசகர்களை அமர்த்துவதற்கும் அனுமதியளித்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி–2–ல் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள ரூ. 774.80 கோடி தொகையில், நில எடுப்புப் பணிகள், மின் கம்பங்கள், தண்ணீர் குழாய்கள் மற்றும் தொலைபேசி இணைப்பு கேபிள்கள் போன்ற பயன்பாட்டு பொருட்கள் இடமாற்றம் செய்தல் ஆகியவைகளுக்கான செலவினத்தை மேற்கொள்ளவும், மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் வடிவமைப்பு சரிபார்த்தல் ஆகிய பணிகளுக்காக ஆலோசகர்களை அமர்த்துவதற்கான செலவினத்தையும் இம்மதிப்பீட்டுத் தொகையிலேயே செலவிடவும் ஒப்புதலளித்து அரசு ஆணையிடுகிறது.

5. . மேலும், இப்பாலப் பணிக்கான திட்டச் செலவினத்தினை கீழ்க்கண்ட வகையில் செலவிட தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்), நெடுஞ்சாலைத் துறை அவர்களுக்கு அனுமதியளித்து அரசு ஆணையிடுகிறது.

| நிதியாண்டு | செலவிடப்படும் தொகை<br>ரூபாய் |
|---|---|
| 2007–08 | ரூ. 24.80 கோடி |
| 2008–09 | ரூ.100.00 கோடி |
| 2009–10 | ரூ.300.00 கோடி |
| 2010–11 | ரூ.350.00 கோடி |
| மொத்தம் | ரூ.774.80 கோடி |

6. இரயில்வே பகுதியில் கட்டப்படும் பாலப் பகுதி மற்றும் அணுகு சாலை அமைத்தல் பணிகளுக்கு ஏற்படும் மொத்த செலவினத்தில், 50% தொகையை இரயில்வே துறையிடமிருந்து பெற்று, தொடர்புடைய அரசுக் கணக்கில் சேர்க்குமாறும், அது குறித்த விபரங்களை அரசுக்கு உடன் தெரிவிக்குமாறும் தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்), நெடுஞ்சாலைத் துறை, சென்னை.15 கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. மேலே பத்தி 2ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் “புதுப் பணிகள் (New Service)” குறித்ததாகும். இதற்காக சட்டப் பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலைப் பெறும் வகையில் இத்திட்டத்திற்கான ஆரம்பச் செலவினம் எதிர் பாராச் செலவு (Contingency Fund) நிதியிலிருந்து முன்பணமாகப் பெற்று செலவிடப்படும், இதற்கான ஆணை நிதி (வரவு–செலவு பொது–1)த் துறையில் தனியாக வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்த தேவைப்படும் முன்பணத் தொகையினை பெறுவதற்கு வரையறுக்கப்பட்ட படிவத்தில், இவ்வரசாணையின் இரு படிகளை இணைத்து நிதி (வரவு–செலவு–பொது–1)த் துறைக்கு விண்ணப்பிக்குமாறு தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்), நெடுஞ்சாலைத் துறை , சென்னை.15 அவர்கள் கேட்டு கொள்ளப்படுகின்றார்.

8. மேலும் இச்செலவினம் குறித்து சட்டப் பேரவையின் கவனத்திற்கு கொண்டுவரும் பொருட்டு, இவ்வாண்டின் துணை மதிப்பீட்டில் (Supplementary Estimates) சேர்த்திட, இப்பணிக்கான மொத்த நிதியொதுக்கீடு, இந்த நிதியாண்டில் பணிகளின் செயலாக்கத்திற்காக தேவைப்படும் செலவினம் ஆகிய விவரங்களை உள்ளடக்கிய விளக்கக் குறிப்பு ஒன்றினை

உரிய நேரத்தில் நிதி (வரவு–செலவு பொது–1) த் துறைக்கு அனுப்புமாறு தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்), நெடுஞ்சாலைத் துறை, சென்னை.15 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்.

9. மேலே பத்தி–2–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

5054–சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு–80–பொது–800–ஏனைய செலவு–பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்–II மாநிலத் திட்டம்–JT–இருப்புப் பாதை மேம்பாலங்கள்/இருப்புப் பாதை கீழ் பாலங்களைக் கட்டுதல்–16–பெரும் பணிகள் (த.தொ.கு. எண் 5054–80–800–JT–1604)

10. இவ்வரசாணை நிதித் துறையின் இசைவுடன், அத்துறையின் அ.சா.கு. எண் 68014//பொ.ப.1/2007, நாள் 07.11.2007 –ன்படி வெளியிடப்படுகிறது. மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண் 1248 (ஆயிரத்து இரு நூற்று நாற்பத்தி எட்டு)

(ஆளுநரின் ஆணைப்படி)

கா. அலாவுதீன்
அரசு செயலாளர்

பெறுநர்
தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்), நெடுஞ்சாலைத் துறை, சென்னை.15
தலைமைப் பொறியாளர் (பொது), நெடுஞ்சாலைத் துறை, சென்னை.5
பொது மேலாளர், தென்னக ரயில்வே, சென்னை.3.
தலைமைப் பொறியாளர் திட்ட மேலாளர் (இருப்புப் பாதை மாற்றம்), தென்னக ரயில்வே, சென்னை.8.
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை.18/35.
கருவூல அலுவலர், சென்னை.15.
நகல்
முதலமைச்சர் அலுவலகம், சென்னை.9
நிதி அமைச்சர் அலுவலகம், சென்னை.9.
நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அலுவலகம், சென்னை.9.
சம்பந்தப்பட்ட திட்டப் பணிகள் பிரிவு அலுவலகங்கள்
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியாளர்கள்,
நெடுஞ்சாலைத் துறை அனைத்து திட்டப் பிரிவுகள்
நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, சென்னை.9
நிதி (பொ.ப.1) (வ–செ. பொ.2) கடன் சான்றுத் துறை, சென்னை.9.
இ.கோ./உதிரி

/உத்தரவுப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.

<u>பிற்சேர்க்கை</u>

| வ. எண். | பணியின் பெயர் | நிர்வாக அங்கீகாரம் கோரி தெரிவிக்கப்படும் தொகை (ரூ. கோடிகளில்) |
|---|---|---|
| | காஞ்சிபுரம் மாவட்டம் | |
| 1 | இரயில்வே கி.மீ 16/8 – 10 ல் கிண்டி புனித தோமையர் இரயில் நிலையங்களுக்கு இடையே கடவு எண். 14 க்கு மாற்றாக பாதசாரிகள் பயன்படுத்தும் சுரங்கப்பாதை அமைத்தல் (பச்சை அம்மன் கோயில் தெரு). | 2.20 |
| 2 | இரயில்வே கி.மீ. 19/22–24 ல் பழவந்தாங்கல் – மீனம்பாக்கம் இரயில் நிலையங்களுக்கு இடையே கடவு எண். 18 க்கு மாற்றாக பாதசாரிகள் பயன்படுத்தும் சுரங்கப்பாதை அமைத்தல் (ஏ.எம். ஜெயின் கல்லூரி அருகில்) | 5.10 |
| 3 | இரயில்வே கி.மீ. 20/5–6 ல் மீனம்பாக்கம் – திரிசூலம் இரயில் நிலையங்களுக்கு இடையே கடவு எண். 20 க்கு மாற்றாக பாதசாரிகள் பயன்படுத்தும் சுரங்கப்பாதை அமைத்தல் (DGQA CO-OPTEX அருகில்). | 0.80 |
| 4 | இரயில்வே கி.மீ. 84/21–85/1 ல் மதுராந்தகம் – பாக்கம் இரயில் நிலையங்களுக்கிடையே கடவு எண். 69 க்கு மாற்றாக சாலை மேம்பாலம் அமைத்தல். (மதுராந்தகம் அருகில்) | 22.50 |
| 5 | இரயில்வே கி.மீ 36/12–14 ல் வண்டலூர் – கூடுவாஞ்சேரி இரயில் நிலையங்களுக்கிடையே கடவு எண். 36 க்கு மாற்றாக சாலை மேம்பாலம் அமைத்தல் (ஊரப்பாக்கம் அருகில்). | 34.50 |
| | திருவள்ளூர் மாவட்டம் | |
| 6 | இரயில்வே கி.மீ 44/28–30 ல் கவரப்பட்டு – கும்மிடி பூண்டி இரயில் நிலையங்களுக்கு இடையே கடவு எண். 33 க்கு மாற்றாக கும்மிடிப் பூண்டி இரயில் நிலையத்திற்கு அருகில் மேம்பாலம் அமைத்தல் (கும்மிடிப் பூண்டி அருகில்). | 39.00 |
| 7 | இரயில்வே கி.மீ. 10/28–30 ல் திருவொற்றியூர் – எண்ணூர் இரயில் நிலையங்களுக்கு இடையே கடவு எண். 7 க்கு மாற்றாக சாலை மேம்பாலம் அமைத்தல் (விம்கோ நகர் அருகில்). | 19.00 |
| 8 | இரயில்வே கி..மீ 29/28–30 ல் எண்ணூர் – அத்திப்பட்டு இரயில் நிலையங்களுக்கிடையே கடவு எண். 13 & 14 க்கு மாற்றாக சாலை மேம்பாலம் அமைத்தல் (அத்திப்பட்டு அருகில்). | 17.00 |
| 9 | இரயில்வே கி.மீ. 49/4–6 ல் கும்மிடிப்பூண்டி – எளாவூர் இரயில் நிலையங்களுக்கிடையே கடவு எண். 37 க்கு மாற்றாக சாலை மேம்பாலம் அமைத்தல். (கும்மிடிப் பூண்டி அருகில்). | 17.00 |
| 10 | இரயில்வே கி.மீ. 35/30–32 ல் திருநின்றவூர் – திருவள்ளூர் இரயில் நிலையங்களுக்கிடையே கடவு எண். 15 க்கு மாற்றாக சாலை மேம்பாலம் அமைத்தல் (செவ்வாய் பேட்டை அருகில்). | 24.50 |
| | வேலூர் மாவட்டம் | |
| 11 | இரயில்வே கி.மீ. 163 / 15–17 ல் வளாத்தூர் இரயில்வே யார்டு அருகில் கடவு எண். 69 க்கு மாற்றாக உளி–காகாதோப்புசாலை கி.மீ. 0/2 ல் சாலை மேம்பாலம் அமைத்தல். (உள்ளி அருகில்) | 12.00 |
| 12 | இரயில்வே கி.மீ. 158/26–28 ல் மேலாத்தூர் – வளத்தூர் இரயில் நிலையங்களுக்கிடையே இரயில்வே யார்டு அருகில் கடவு எண். 66 க்கு மாற்றாக சாலை கீழ்பாலம் அமைத்தல். | 10.50 |
| 13 | இரயில்வே கி.மீ.197/36–198ல் வாணியம்பாடி–கேதாண்ப்பட்டி இரயில் நிலையங்களுக்கிடையில் வாணியம்பாடி இரயில் நிலையம் யார்டு அருகில் கடவு எண் 81–க்கு மாற்றாக சாலை | 13.00 |

கா.அலாவுதீன்
அரசு செயலாளர்

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்.